சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 573 / 2018

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி 08.09.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ரத்தினகிரி | கிராமம : | |
| த/பெ : | மணி | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக நான் தான் போலீசாரில் புகார் கொடுத்தேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் செய்வேன். நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகார் மனுவில் விபத்து ஏற்பட்டதை கேள்விப்பட்டு நான் அங்கு சென்று பார்த்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் குற்றவியல் நீதிமன்ற சாட்சியத்திலும் அடையாளர் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் பார்க்காத விபத்தை பார்த்தாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம் / ரத்தினகிரி

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.